திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை 1993–94ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினொன்றாவது, பன்னிரெண்டாவது மற்றும் பதின்மூன்றாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஆ) சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1994 (ஆ, இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 17/1994) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1994

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994ஆம் ஆண்டு தமிழ் நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 17/1994) மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு @(சட்டமன்றப் பேரவைச் சட்டமுன் வடிவு எண் 17/1994) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

இதைப்பற்றி விளக்கங்கள் கூறவேண்டிய தேவையில்லை என்றே கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் முழுவதுமே எதிர்த்தாலும் கூட கவலைப்பட மாட்டேன் என்பதைச் சொல்லி (சிரிப்பு) இதனை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் எனக் கோருகிறேன்.

@ 2-5-1994-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், இதிலே, எதுவும் வேண்டாம். ஏற்கெனவே நிதி அமைச்சர் அவர்களிடத்தில் பேசி வாங்கி இருப்பதே பெரிய பாடு. நீங்கள் இதில் பேசி வேறு குறைக்கப் போகிறீர்களா? (சிரிப்பு) நம்முடைய பிரச்சினை, சட்டமன்ற மானியத்தில் பேசியதுதான். (குறுக்கீடு) அது அடுத்து வருகிறது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன் வடிவு எண் 17/1994) நிறைவேற்றப்பெற வேண்டும் " எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன் வடிவு, 1994 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1994) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

(ஆ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன் வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 18/1994). மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல்